தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2013-2014)

(பதினான்காவது பேரவை)

நான்காவது அறிக்கை

பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 16 JUL 2014

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை-600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2013–2014)

(பதினான்காவது பேரவை)

நான்காவது அறிக்கை

11-437—1


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கம்
1.	2013–2014 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு ..	iii
2.	முகவுரை ..	v

இணைப்பு–1

1.	தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் 2008–2009–வது ஆண்டறிக்கையினை பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து தொழில் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை ..	3
2.	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 2007–2008, 2008–2009 மற்றும் 2009–2010 ஆகிய ஆண்டுகளுக்கான ஆண்டுக்கணக்குகள்/ஆண்டுக்–கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கைகளை பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து வேளாண்மைத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை ..	5

இணைப்பு–2

1.	பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் ..	7


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2013–2014)

(பதினான்காவது பேரவை)

(2013–ஆம் ஆண்டு மே திங்கள் 16–ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

1. **தலைவர்**

திரு. ஆர். சின்னசாமி

உறுப்பினர்கள்

2. திரு. இரா. அண்ணாதுரை
3. திரு. அ. கணேஷ்குமார்
4. திருமதி ஆர். சாந்தி
5. திரு. கா. தமிழரசன்
6. திரு. என்எஸ்என். நடராஜ்
7. திரு. கே.பி. நாகராஜன்
8. திரு. அ. பாஸ்கர்
9. டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்
10. திரு. இரா. மணிமாறன்
11. திரு. பொன். ராஜா

சட்டமன்றப் பேரவைச் செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் : செயலாளர்

திருமதி கோ. காயத்ரி : கூடுதல் செயலாளர்

திரு. மா. கோபாலகிருஷ்ணன் : குழு அலுவலர்

திருமதி பி. தேன்மொழி : சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2013–2014)

(பதினான்காவது பேரவை)

நான்காவது அறிக்கை

முகவுரை

2013–2014–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கையை குழுத் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுக் கூட்டம்

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் 2008–2009 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 2007–2008, 2008–2009 மற்றும் 2009–2010 ஆகிய ஆண்டுகளுக்கான ஆண்டுக்கணக்குகள் மற்றும் ஆண்டுக்கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கைகள் ஆகியவற்றை பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெற்றது குறித்து 21.1.2014 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. அக்கூட்டத்தில் தொழில் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், வேளாண்மைத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மேற்காணும் அறிக்கைகளை பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெற்றது குறித்து விளக்கமளித்தனர். அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள், குழு முன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகள் இணைப்பு–1–ல் அளிக்கப்பட்டுள்ளன.

18.2.2014–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை–600 009,
18.02.2014
விஜய – மாசி 6–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2045.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு – I

11-437—2


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	தமிழ்நாடு மேக்னசைட் (TANMAG) நிறுவனம்	2008–2009	31.03.2010–க்குள்	11.11.2010	7 மாதங்கள் 10 நாட்கள்

துறையின் பதில்
(7)

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் 2008–2009 ஆம் ஆண்டறிக்கை பேரவையில் வைப்பதில் காலதாமதம் ஆனதற்கு ஆண்டறிக்கையினை அச்சடிக்கப்பட்டு பெறுவதில் தான் இரண்டு மாதம் காலதாமதம் ஏற்பட்டது. அறிக்கையின் அச்சுப்படிகளில் ஏற்பட்ட அச்சுப்பிழைகளை சரி செய்வதற்காக அச்சகத்திற்கு ஏழு முறை அனுப்பப்பட்டதுதான் காலதாமதத்திற்கான முக்கியமான காரணம்.

அதன் பின்னர் துறை அமைச்சர் அளவில் அறிக்கைக்கு ஒப்புதல் பெற்று திரும்பி வரும் நேரத்தில் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்து விட்டதால் அந்த அறிக்கையை அடுத்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் சமர்ப்பிப்பதற்கு 6 மாதம் கால தாமதம் ஏற்பட்டது. 2012–2013–க்கான அறிக்கை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதிக்குள் சட்டமன்றத்தில் வைக்கப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

கடந்த காலங்களில் மூன்று, நான்கு வருடங்கள் தாமதமாக ஆண்டறிக்கைகள் பெறப்பட்டுள்ளதை ஒப்பிடும் போது, தற்போது 3 முதல் 6 மாத காலமே தாமதம் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு துறையின் விளக்கத்தை குழு ஏற்றுக் கொள்கிறது. எனினும், இனிவருங் காலங்களில் அறிக்கைகளை சரியான நேரத்தில் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
2.	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்	2007–2008	31.03.2009–க்குள்	11.01.2010	9 மாதங்கள் 11 நாட்கள்
		2008–2009	31.03.2010–க்குள்	13.01.2011	9 மாதங்கள் 13 நாட்கள்
		2009–2010	31.03.2011–க்குள்	31.10.2012	1 வருடம் 7 மாதங்கள்

துறையின் பதில்
(7)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பத்திலிருந்தே Post audit system தான் பின்பற்றப்படுகிறது. Pre audit system பின்பற்றப்படுவதில்லை. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கை உள்ளாட்சித் தணிக்கை செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 31–ம் தேதி கொடுக்கப்பட வேண்டும். உள்ளாட்சித் தணிக்கை முடிக்கப்பட்டு 4 மாதங்களுக்குள் திரும்ப பெறப்படும். உள்ளாட்சித் தணிக்கையில் தெரிவிக்கும் தவறுகளை சரி செய்து, திருத்தங்கள் செய்து கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

மேலும், அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி, இதர துறைகளிலிருந்து பெறப்படும் நிதியுதவி மற்றும் வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நிதியுதவிகளையெல்லாம் தணிக்கை செய்யும் போது மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. மேலும், தணிக்கைத் துறையில் பணியிடங்கள் நிரப்பப்படாததும் ஒரு காரணம். எனினும் இனிமேல் இதுபோன்ற தவறுகள் நிகழா வண்ணம் பார்த்துக்கொள்ளப்படும்.

ஆண்டுக் கணக்குகள் மற்றும் ஆண்டுக்கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கைகள் சமர்ப்பித்தலில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க தற்போது பின்பற்றப்படும் Post audit system முறையிலிருந்து concurrent audit system முறைக்கு மாறும் கருத்துரு ஆய்வில் உள்ளது.

குழுவின் பரிந்துரை
(8)

ஆண்டறிக்கை சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு பணியாளர்கள் பற்றாக்குறையும் தணிக்கை முறையும் காரணம் என்ற விளக்கத்தினை குழு ஏற்றுக் கொள்கிறது.

பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கைகள் மற்றும் தணிக்கை அறிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரின் சான்றொப்பமிட்ட காலதாமதத்திற்கான காரணங்களை விளக்கும் விவர அறிக்கை இணைக்கப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்துகிறது.

இனி வருங்காலங்களில் காலதாமதம் இல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் உரிய நேரத்தில் தணிக்கையை முடிக்க வேண்டும் என்றும், தொடர் நடவடிக்கைகளை விரைந்து எடுத்து காலதாமதமின்றி ஆண்டறிக்கைகள் மற்றும் ஆண்டறிக்கைகள் மீதான தணிக்கை அறிக்கைகள் உரிய காலத்திற்குள் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

இணைப்பு – II


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – II

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

7.06.2013	சென்னை
18.09.2013	கோயம்புத்தூர்
19.09.2013	நீலகிரி
21.01.2014	சென்னை

****

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS